

# 03 ஆம் அத்தியாயம்
# இலங்கையில் சமய, அரசியல், மறுமலர்ச்சி

★ இலங்கையில் நீண்ட காலமாக நிலவி வந்த சுதேச கலாசாரமானது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பியரின் வருகையால் பலவித மாற்றங்களுக்குள்ளானது.

★ 1815 இல் மலையக இராச்சியம் உட்பட முழு இலங்கையையும் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்த ஆங்கிலேயர் சுதேச மக்களிடமிருந்த அரசியல், சமய அதிகாரங்களையும் உரிமைகளையுங் கூட தம் வசப்படுத்திக் கொண்டனர்.

★ இழந்துபோன அதிகாரங்களையும் உரிமைகளையும் மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக இலங்கையர் அரும்பாடுபட்டனர்.

★ அதன் பயனாக சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும் அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளவும் முடிந்தது.

★ எமது உரிமைகளை வெற்றி கொள்வதற்கும் பாதுகாப்பதற்கும் முன்னணியில் நின்று செயற்பட்ட எல்லாத் தலைவர்களையும் நன்றியுடன் நினைவு கூர்ந்து இப்பாடத்தைக் கற்கத் தொடங்குவோம்.

### பிரித்தானியரது ஆட்சியில் சமூக, கலாசார சீரழிவு

❖ பிரித்தானியரது ஆட்சியின் ஆரம்பத்துடனேயே இலங்கையில் மன்னராட்சி முறை இல்லாதொழிந்ததுடன் மக்களுக்கும், ஆட்சியாளருக்கும் இடையிலான பிணைப்புக் குறைவடையத் தொடங்கியது. இதனால் மக்கள் அநீதிக்கு ஆளாகினர்.

❖ நீண்ட காலமாக இலங்கையில் வேரூன்றியிருந்த ஒற்றுமை, சமாதானம் என்பவற்றுக்குப் பதிலாகப் போட்டி மனப்பான்மை வளர்ந்ததுடன், ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்ந்த மக்கள், பணத்தைப் பெருமளவு மதிப்போராக மாறினர்.

பிரித்தானிய அரச அனுசரணையுடன் சாராயத் தவறணைகள் நாட்டினுள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மக்கள் மது, சூது முதலிய பழக்கங்களுக்கு அடிமையாகினர். இதனால் சுதேச கலாசாரம் மேலும் சீரழிந்தது. எனவே அதுவரை காலமும் சமூகத்தில் நிலவி வந்த ஒழுக்கம் படிப்படியாக இல்லாமல் போனது.

பிரித்தானியர் தமக்குச் சார்பானவர்களை உருவாக்கிக் கொள்ள அரசியலையும் சமயத்தையும் ஒரு ஆயுதமாக பயன்படுத்தினர்.

பிரித்தானியரது அரசியல், சமயம், பண்பாடு என்பன இங்கு பரவியதும் விகாரைகளுடன் இணைந்த அறநெறிகள் சமூகத்திலிருந்து விலகிச் செல்லலாகின.

## மிஷனரி இயக்கம்

கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே மிஷனரி இயக்கம் எனப்படும்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய முப்பிரிவினரும் தமது சமயத்தைப் பரப்புவதற்குக் கல்வியை ஒரு கருவியாகக் கொண்டனர்.

### ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் செயற்பட்ட மிஷனரி இயக்கங்கள்

1. லண்டன் மிஷனரி இயக்கம் - 1804 -1805
2. பப்டிஸ்ட் மிஷனரி இயக்கம் - 1812
3. வெஸ்லியன் மிஷனரி இயக்கம் - 1814 - 1815
4. அமெரிக்கன் மிஷனரி இயக்கம் - 1816
5. சேர்ச் மிஷனரி இயக்கம் - 1818

**கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு மிஷனரிகள் கையாண்ட பல்வேறு நடவடிக்கைகளும் அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளும்**

1. அரச ஆதரவைப் பெற்றுக் கொண்டமை.
2. மிஷனரி இயக்கங்கள் போட்டி மனப்பான்மையுடன் செயற்பட்டமை.
3. சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டமை.
4. புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளை வெளியிட்டமை.
5. ஐரோப்பிய மதகுருமார் தமிழ், சிங்கள மொழிகளைக் கற்றுத்தேர்ந்து, ஆங்கிலத்திலான கிறிஸ்தவ சமய நூல்களைத் தமிழ், சிங்கள மொழிகளில் மொழி பெயர்த்தமை.
6. கிராமங்களில் பாடசாலைகளை ஆரம்பித்து விரிவாக்கம் செய்தமை.

❖ 19ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதிகளில் அரச அனுசரணையுடன் நகரங்களிலும் கிராமங்களிலும் மிஷனரிகள் பாடசாலைகளை ஆரம்பித்தன. அத்துடன் பாடசாலைகளுடாகக் கிறிஸ்தவ சமயத்தைப் போதிப்பதற்குரிய சகல வசதிகளும் அரசாங்கத்தால் மிஷனரிகளுக்கு செய்து கொடுக்கப்பட்டன.

❖ ஆதரவற்றோருக்கு உதவுதல், நோயாளரைக் கவனித்தல் போன்ற சமூக சேவைகள் மேற்கொள்ளப்பட்டன

❖ கிறிஸ்தவ சமயத் தத்துவங்கள் அடங்கிய தமிழ், சிங்கள மொழி மூல நூல்களை வெளியிட்டதன் மூலம் மக்களுடன் நெருக்கமான உறவுகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிட்டியது.

மேற்கூறப்பட்ட மிஷனரி இயக்கங்கள் அதிகளவான மக்களைத் தம் பக்கம் கவர்ந்திழுப்பதற்காகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன.

| மிஷனரி இயக்கங்கள் | கிறிஸ்தவ சமயமும், கல்வியும் போதிக்கப்பட்ட இடங்கள் |
|---|---|
| பப்டிஸ்ட் மிஷனரி | கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கியது. |
| வெஸ்லியன் மிஷனரி | நாட்டின் வடக்கு, தெற்குப் பகுதிகளில் இயங்கியது. |
| சேர்ச் மிஷனரி | கொழும்பு, காலி, கற்பிட்டி, மன்னார், கண்டி ஆகிய பகுதிகளை மையமாகக் கொண்டு செயற்பட்டது. |
| அமெரிக்கன் மிஷனரி | யாழ்ப்பாணம் உட்பட வடபகுதி முழுவதும் இயங்கியது. |

## 19ஆம் நூற்றாண்டில் செயற்பட்ட மிஷனரி இயக்கங்கள்

19ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் விகாரைகளும், மிஷனரிகளும் ஒற்றுமையுடன் செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது. விகாரை வளவையும் தர்மசாலையையும் தமது கூட்டங்களை நடத்துவதற்காக மிஷனரிமார்கள் பயன்படுத்தினர்.

- ❖ பௌத்த பிக்குகளிடம் சிங்கள மொழியைக் கற்ற மிஷனரிமார் தமது சமயப் பிரசாரப் பணிகளுக்கு அம்மொழியறிவைப் பயன்படுத்தினர். பைபிளை சிங்களத்தில் மொழிபெயர்ப்பதற்குக் கூடப் பிக்குகளின் உதவி ஒத்தாசைகளைப் பெற்றுக் கொண்டனர்.
- ❖ அவ்வாறே மிஷனரிமார் தமிழ் சமூகத்துடனும் நல்லுறவைப் பேணித் தமிழ் மொழியைக் கற்று சமய நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டனர்.

சில மிஷனரி குழுக்கள் சமயத்தைப் பரப்பும் நடவடிக்கைகளில் எதிர்பார்த்த அளவு வெற்றியடையாதபோது பௌத்த, இந்து மக்களுடனான நல்லுறவை உடைத்தெறிந்து தமது நோக்கத்தை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.

- ❖ சிலை வணக்கம் என்பது போலியான அர்த்தமற்ற செயற்பாடாகும் என எடுத்துக் காட்டிய சில மிஷனரி குழுக்கள் பௌத்த, இந்து அனுஷ்டானங்களை விடக் கிறிஸ்தவ மத அனுஷ்டானங்கள் முக்கியமானவை எனக் கூறியதுடன், பௌத்த குருமாரும், இந்து மதக்குருமாரும் கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளாக்கப்பட்டனர்.

ஆங்கில மொழிக் கல்வி அறிமுகமானதைத் தொடர்ந்து அம்மொழியைக் கற்பதன் மூலம் அரசாங்க வேலைவாய்ப்புக்களையும் பதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் முனைப்புக் காட்டினர். பணம் படைத்த சிங்கள, தமிழ் வகுப்பினர் தமது சமயங்களைக் கைவிட்டுக் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவி ஆங்கிலப் பாடசாலைகளில் சேர்ந்து கல்வி கற்றனர்.

- ❖ பல்வேறு நோக்கங்களுக்காகப் போர்த்துக்கேயரின் செல்வாக்கால் கத்தோலிக்க சமயத்தையும், ஒல்லாந்தரின் செல்வாக்கால் புரட்டஸ்தாந்து சமயத்தையும் தழுவியிருந்த இலங்கையரும் அவற்றைக் கைவிட்டு இங்கிலாந்துக் கிறிஸ்தவ சமயத்தை ( ஆங்கிலத் திருச்சபை /அங்கி லிக்கன்) தழுவிக் கொண்டு ஆங்கில பாடசாலைகளில் சேர்ந்து கல்வி பயின்றனர்.
- ❖ அரச ஆதரவு பெற்ற பாடசாலைகளின் மூலம் படிப்படியாக நாடு முழுவதும் அங்கிலிக்கன் கிறிஸ்தவ சமயம் பரவியது.

**தாம் இழந்து வரும் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அணிதிரள வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்ட பௌத்த, இந்து, இஸ்லாமியத் தலைவர்கள் அதற்காக செயற்பட்டனர். அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ''சமய மறுமலர்ச்சி'' ஏற்பட்டது.**

## சமய மறுமலர்ச்சி

### பௌத்த சமய மறுமலர்ச்சி

**பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

1 பிரிவெனாக் கல்வி நிறுவனங்கள் அமைக்கப்பட்டமை

2 வாத, பிரதிவாதங்கள் மேற்கொள்ளப்பட்டமை

3 நாடகங்கள் மேடையேற்றப்பட்டமை

4 கவிதைகள், உரைநடைகள் எழுதப்பட்டமை

5 பத்திரிகைகள் வெளியிடப்பட்டமை

6 பௌத்த ஆங்கிலப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை

**பிரிவெனாக் கல்வி நிறுவனங்கள் அமைக்கப்பட்டமை**

| ஆண்டு | முன்னோடியான பௌத்த பிக்கு | பிரிவெனாவின் பெயர் |
|---|---|---|
| 1841 | வலானே சித்தார்த்த தேரர் (வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கரா தேரரின் மாணவர்) | இரத்மலானை பரமதம்மசைத்திய பிரிவெனா |
| 1873 | ஹிக்கடுவ ஸ்ரீசுமங்கல தேரர் (வலானே சித்தார்த்த தேரரின் மாணவர்) | மாளிகாகந்தை வித்யோதய பிரிவெனா |
| 1875 | ரத்மலானை ஸ்ரீ தர்மலோக தேரர் | பேலியகொட வித்யாலங்கார பிரிவெனா |

பழைய சிங்கள அரசர்களின் காலத்தைப் போன்று பௌத்த கல்வியின் மத்திய நிலையமாகப் பிரிவெனாக்கள் செயற்பட்டன.

### விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டமை

கிறிஸ்தவ சமயப் பாதிரிமார் பௌத்த சமய நூல்களில் காணப்பட்ட சில கருத்துக்களை விமர்சனம் செய்தனர். அதுமட்டுமல்லாது பௌத்த பிக்குகளை அகௌரவப்படுத்தவும் ஆரம்பித்தனர். 1860 இல் கொகர்லி எனும் பாதிரியார் பௌத்த சமயம் பொய்யானது என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்களைத் திரட்டினார். எனவே இதற்குப் பதிலடி கொடுப்பதற்காக பம்பரந்தே ரேவததேரர், ஹிக்கடுவ சிறீ சுமங்கல தேரர், மீகெட்டுவத்த குணானந்த தேரர், பொத்துவில இந்திரஜோதி தேரர், வஸ்கடுவ ஸ்ரீ சுபூதி தேரர் முதலிய பண்டித பிக்குகள் கிறிஸ்தவ பாதிரிமாரைப் பகிரங்க விவாத மேடைக்கு வருமாறு அழைப்பு விடுத்தனர். அதற்கேற்ப இலங்கையில் பல்வேறு இடங்களிலும் விவாதங்கள் இடம்பெற்றன.

மேற்படி விவாதங்கள் ஐந்து இடம் பெற்றன. இவை பஞ்ச (ஐம்பெரும்) மகா விவாதங்கள் என அழைக்கப்பட்டன. இவ்விவாதங்கள் நடைபெற்ற இடங்களும் ஆண்டுகளும் வருமாறு

- 1864 - பத்தேகம
- 1865 - வராகொட
- 1866 - உதம்மிட்ட
- 1871 - கம்பளை
- 1873 - பாணந்துறை

### பாணந்துறை விவாதம்

பஞ்ச மகா விவாதங்களுள் பாணந்துறை விவாதம் பிரபலமானது. புகழ் பெற்ற இவ்விவாதம் மீகெட்டுவத்த குணானந்த தேரரின் தலைமையில் நடைபெற்றது. கிறிஸ்தவ சமயம் பற்றிய தேரரின் அறிவு இவ்விவாதத்தின் வெற்றிக்குப் பெரிதும் துணைபுரிந்தது. மேலும் ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் தலைமையிலான ஏனைய பிக்குமாரிடமிருந்து கிடைத்த ஆலோசனைகளும் பாணந்துறை விவாதத்தின் வெற்றிக்குத் துணை நின்றன. குணானந்த தேரரின் பேச்சாற்றலும், சமய ஞானமும் பௌத்த மக்களின் மனங்களைக் கவர்ந்ததுடன் அவருடன் எதிர்வாதம் புரிந்த கிறிஸ்தவ பாதிரிமாரை வாயடைக்கச் செய்தன.

## பஞ்ச மகா விவாதங்களின் பிரதிபலன்கள்

- பௌத்த மறுமலர்ச்சியில் ஒரு புதிய யுகம் உருவானது.
- விவாதங்கள் வெளிநாடுகளிலும் பிரபலமடைந்ததுடன் பௌத்த சமயம் பற்றிய தெளிவு ஏற்பட்டது.
- விவாத நிகழ்ச்சிகளை அறிந்த வெளிநாட்டு வேற்று மதத்தவர்களின் கவனம் பௌத்த சமயத்தின்பால் திரும்பியது.
- அமெரிக்கரான ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் மற்றும் ரஷ்ய நாட்டவரான ஹெலனா பலவெட்ஸ்கி அம்மையார் முதலியோர் இலங்கை வந்தனர்.

பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலம் பௌத்த சமயப் பிரசாரப் பணிகள் ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.


- லங்காலோகய எனும் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது.
- சுமதி எனும் சிங்கள சஞ்சிகை வெளியிடப்பட்டது.
- 1862இல் முதலாவது பௌத்த பத்திரிகையான 'லக்மினி பஹன' வெளிவந்தது.

- பியதாச சிறிசேன, டபிள்யூ.ஏ.சில்வா, திபெத் இனத்தவரான மஹிந்த தேரர் முதலிய அறிஞர்களின் எழுத்துப்பணி பௌத்த சமய மறுமலர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தது.

- 1865இல் ஹிக்கடுவ சுமங்கல தேரரின் நெறியாள்கையில் அறிஞர்களான பௌத்த பிக்குகள் சபரகமுவ பெல்மடுல்ல பகுதியில் தர்மோபதேச மொன்றை நிகழ்த்தினர்.

''பிறந்த நாட்டில்
பின்பற்றப்படும் சமயத்திற்கு
எவ்வெவ் வகையிலும்
எப்பங்களிப்பும் செய்யாது
தாய் மண்ணுக்குச் சுமையாக
வாழ்வது முறையா இலங்கைப் புதல்வனுக்கு?''

- எஸ். மகிந்த தேரர்



எஸ். மகிந்த தேரர்




இலவச விநியோகத்திற்காக

### மீகெட்டுவத்த குணானந்த தேரரின் சேவைகள்


மீகெட்டுவத்த குணாணந்த தேரர்

- விவாதங்கள் மூலம் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத் தியமை.
- பௌத்த மறுமலர்ச்சி ஏற்படும் விதத்தில் மக்கள் மத்தியில் சமய உணர்ச்சியைத் தூண்டியமை.
- பௌர்ணமி விடுமுறையை மீண்டும் பெற்றுக் கொள்ளும் முகமாக பிரம்மஞான சங்கத்தை நிறுவியமை.
- மாளிகாகந்தை வித்யோதய பிரிவெனாவை அமைப்பதில் பங்களிப்புச் செய்தமை
- குணானந்த தேரர் கிறிஸ்தவப் பாதிரிமாரைத் தோல்வியடையச் செய்து பௌத்த சமயத்தை மெய்ப்பித்த விவாத மேடையைப் பாணந்துறை புகையிரத நிலையத்துக்கு அண்மையில் இன்றும் நீங்கள் காணலாம்.
- அவரை கௌரவப்படுத்தும் முகமாக பாணந்துறை காலி வீதியருகில் அவரது உருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. அவ்வழியே செல்லும் பௌத்தர்கள் அச்சிலையை நன்றியுடன் பார்க்கின்றனர்.

### ஹென்றி ஸ்டீல் ஓல்கொட்



ஹென்றி ஸ்டீல் ஓல்கொட்

**''உண்மையை விட சிறந்த சமயம் இல்லை''** என்ற கருத்திற்கிணங்க செயற்பட்டவர். 1873 இல் இடம்பெற்ற பாணந்துறை வாதம் பற்றிய விபரங்களை ஓல்கொட் அறிய முயற்சித்ததன் விளைவாக 1880 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி காலித் துறைமுகம் ஊடாக இலங்கை வந்த ஒல்கொட் வெலிவத்த விஜயானந்த பிரிவெனாவுக்குச் சென்று பௌத்த சமயத்தைத் தழுவிக் கொண்டார்.

## ஒல்கொட் அவர்களின் சேவைகள்

| | |
|---|---|
| ‘‘பௌத்த கதனோபாய கதனய’’ எனும் பெயரில் வினா விடை வடிவிலான புத்தகத்தை எழுதியமை. | பௌத்த மாணவர்களின் சமய அறிவு விருத்திக்கான பங்களிப்பாக அது அமைந்தது. |
| பரம விஞ்ஞானார்த்த சங்கக் கிளை ஒன்றை கொழும்பில் நிறுவியமை | மிஷனரி இயக்கங்களுக்குச் சமனான இவ்வியக்கம் பௌத்த சமய மறுமலர்ச்சிக்கு உதவியாக அமைந்தது. |
| ஆங்கில மொழிமூலமான பௌத்த பாடசாலைகளை ஆரம்பித்தமை | மிஸனரி பாடசாலைகளுக்குச் சவாலாக இப்பாடசாலைகள் விளங்கின. |
| கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, நாலந்தாக் கல்லூரி, கண்டி தர்மராஜ கல்லூரி, காலி மஹிந்த கல்லூரி மற்றும் கொழும்பு மியுசி யஸ், விசாகா, காலி சங்கமித்த பெண்கள் கல்லூரி என்பவற்றை ஆரம்பித்தல் | பௌத்த பிக்குகள் பொது மக்கள் ஆதரவுடன் நடைபெற்ற இக்கல்லூரிகளில் மிஷனரிப் பாடசாலைகளைப் போலவே லத்தீன், ஆங்கிலம், கணிதம் முதலிய பாடங்களும் போதிக்கப்பட்டன. |
| பௌத்த பிக்குகள், தலைவர்களுடன் இணைந்து குடியேற்ற நாட்டுச் செயலாளரிடம் இலங்கை தொடர்பான மனுக்களை முன்வைத்தல். | 1833 இல் கொட்டாஞ்சேனையில் பௌத்தர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான பிரச்சினையின்போது ஆங்கில அரசாங்கம் பக்கச் சார்பாக நடந்து கொண்டமை எடுத்துக் காட்டப்பட்டது. |
| அதேபோன்று பௌத்த பெரஹரா ஊர்வலங்கள் நடாத்தும் உரிமையைப் பெற்றுக் கொடுத்ததுடன் வெசாக் போயா தினத்தை அரசாங்க விடுமுறை தினமாக்குவதற்கான கோரிக்கையை முன்வைத்தல். | இந்தக் கோரிக்கையின் விளைவாக 1885ம் ஆண்டு முதல் வெசாக் முழு நோன்மதி தினம் இலங்கையில் அரசாங்க விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. |
| ஒல்கொட் அவர்களின் சீடர்கள் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல். | அநகாரிக தர்மபால, வலிசிங்ஹ ஹரிஸ் சந்திர, டி.பீ ஜயதிலக, ஆத்தர் வீ. தியெஸ், அமதோரிஸ் மெண்டிஸ், பியதாச சிறிசேன, ஆர்.ஏ. மிரன்டோ, ஹேவா விதாரண முதலிய பௌத்த தலைவர்கள் அவர்களுள் முக்கியமானவர்களாவர். |

1885இல் வெசாக் பண்டிகையைக் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு முழு நாடும் தயாராக இருந்த வேளை பௌத்த தலைவர்கள் பௌத்த கொடி ஒன்றையும் உருவாக்கியிருந்தார்கள். ஒல்கொட்டினது பங்களிப்புடன் தயாரான அந்தக் கொடியே இன்றும் உலக பௌத்தர்களின் கொடி யாகத் திகழ்கின்றது.





## செயற்பாடு

வெசாக் விடுமுறை, பௌத்த கொடி என்பன பற்றிப் பத்திரிகைக்கு ஆக்கம் ஒன்றை எழுதுங்கள்.

ஹென்றி ஒல்கொட் அவர்களின் சேவைகளை மதிக்கும் வகையில் கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்துக்கு முன்னால் அன்னாரின் உருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. அந்த வீதிக்கு ஒல்கொட் மாவத்தை எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதுடன் ஒல்கொட் நினைவு மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கை வாழ் பௌத்தர்கள் அன்னாரைக் கௌரவிக்கும் வகையில் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி ஒல்கொட் நினைவு தினத்தைக் கொண்டாடுகின்றார்கள்.


மாதாந்தம் போயா தினத்தை விடுமுறை நாளாகப் பெற்றுத் தந்த ஒல்கொட் அவர்களுக்கு இந்நாட்டுப் பௌத்த மக்கள் நன்றிக்கடன் பட்டோராவர்.

**சரசவி சந்தரெஸ - மீகெட்டுவத்தை குணானந்த தேரர்**

### அநகாரிக தர்மபால அவர்கள் (1864 - 1933)

அநகாரிக தர்மபால அவர்களின் இயற்பெயர் தொன் டேவிட் ஹேவா விதாரண ஆகும். கிறிஸ்தவப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி பெற்ற அவர் ஆங்கில மொழியறிவிலும் பைபிளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். பௌத்த - கிறிஸ்தவ விவாத மேடைகளில் இடம்பெற்ற ஆங்கில உரைகளை அவர் சிறப்பான முறையில் சிங்களத்தில் மொழிபெயர்த்தார்.

பௌத்த சமயம், தேசிய கலாசாரம், ஒழுக்கம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதுடன் தன் வாழ்நாளை அதற்காகவே செலவிட்டார்.


அநகாரிக தர்மபால

ஏகாதிபத்திய யுகத்தில் மேற்கு நாட்டவரின் தாக்கத்தால் பௌத்த ஒழுக்கங்கள் பின்தள்ளப்பட்டு மேற்கத்தைய ஒழுக்கங்களை கண்மூடித்தனமாகப் பின்பற்றியதனாலும் மதுபானப் பாவனையாலும் ஏற்படுகின்ற தீமைகளை மக்களுக்கு விளக்கி இவர் மேற்கொண்ட இயக்கத்தால் இலங்கையில் சமய மறுமலர்ச்சி உண்டாக வழியேற்பட்டது.

**பௌத்த சமய எழுச்சிக்காகத் தர்மபால அவர்களுக்குக் கை கொடுத்தோர்**

1. ஹிக்கடுவ சிறீ சுமங்கல தேரர்
2. மீகெட்டுவத்த குணானந்த தேரர்
3. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்கள்
4. ஹெலனா பலவெட்ஸ்கி அம்மையார்
5. மேரி போஸ்டர் ரொபின்சன் அம்மையார்

## தேசிய பௌத்த தர்ம பிரசாரப் பணி

கிராமங்கள் நகரங்கள் தோறும் சென்று தர்மபால அவர்கள் பௌத்த தர்மத்தைப் பிரசாரம் செய்தார். அதற்காக மக்களை உணர்வூட்டும் வகையில் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டார். பஞ்சசீலக் கொள்கையைப் பின்பற்றுவதில் மக்களை உற்சாகப்படுத்திய அவர் மூடநம்பிக்கைகளைத் தெளிவாக மக்களுக்கு இனங்காட்டினார்.

இந்தியாவில் அமைந்துள்ள புத்த கயாவைப் பாதுகாப்பதிலும் பௌத்த சமய நடவடிக்கைகளிலும் தர்மபால அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.அவரது நடவடிக்கைகளில் சில வருமாறு:

1. ஹிக்கடுவ சுமங்கலத் தேரரின் உதவியுடன் 1891இல் மகாபோதி சங்கத்தை ஆரம்பித்தார். (சர்வதேச பௌத்த தூதுச் சங்கம்)

2. மகாபோதி சங்கம் மூலம் **'த பிரிட்டிஸ் நியூஸ்'** எனும் ஆங்கில சஞ்சிகையையும் மகாபோதி சஞ்சிகையையும் வெளியிட்டார்.

3. 'சிங்கள பௌத்தயா' எனும் சிங்களப் பத்திரிகையை ஆரம்பித்தார்.

4. மகாபோதி ஆங்கிலப் பாடசாலை மற்றும் மகாபோதி அச்சகத்தையும் நிறுவினார்.

5. பரம விஞ்ஞானார்த்த சங்கத்துடன் இணைந்து செயற்பட்டார்.

6. ஒல்கொட் அவர்களுடன் ஊர் ஊராகச் சென்று அவரது ஆங்கில உரைகளை சிங்களத்தில் மொழி பெயர்த்தார்.

7. ஒல்கொட் மற்றும் பலவெட்ஸ்கி அம்மையாருடன் இணைந்து நாடு நாடாகச் சென்று தர்ம உபதேசம் புரிந்தார்.

8. நாட்டின் பல பாகங்களிலும் பௌத்த பாடசாலைகளை ஆரம்பித்து மகாபோதி சங்கம் மூலம் நிர்வகிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.
   உ+ம் பன்னிப்பிட்டிய தர்மபால வித்தியாலயம்
   கொழும்பு ஆனந்த பாலிகா (மகளிர்) கல்லூரி

9. கண்டியில் மேரி போஸ்டர் இளம் பௌத்த பிக்கு (சாமனேரர்) நிறுவனத்தை ஆரம்பித்து தர்ம தூது சேவைக்காக பிக்குணிகளுக்குப் பயிற்சியளித்தார்.

10. கண்டியில் மகாபோதி ஓய்வு மண்டபத்தை நிறுவினார்.

11. வித்யோதய பிரிவெனாவின் வளர்ச்சிக்கு நிதி உதவி வழங்கினார்.

பிரம்மச்சாரியாக வாழ்க்கையை மேற்கொண்ட அவர் ஆரிய சிங்கள வர்களின் பெருமைகளை எடுத்துக் காட்டி அதனைச் செயலிலும் நிரூபித்தார். தொன் டேவிட் ஹேவா விதாரண எனும் தமது பெயரை அநகாரிக தர்மபால என மாற்றிக் கொண்டார்.

## வெளிநாட்டு தர்ம தூதுச் சேவைக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள்



- ஒல்கொட் மற்றும் பலவெட்ஸ்கி அம்மையாருடன் வடஇந்தியாவிற்கு தம்பதிவ யாத்திரை மேற்கொண்டமை

- இந்தியாவில் புத்தகயா ஓர் இந்து மதகுருவின் கீழ் இருந்தமையைக் கண்டு அதனை மீட்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டமை

> புத்தகயாவை மீட்பதற்காக எனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிப்பேன்.
>
> தர்மபாலவின் நாட்குறிப்பு

அநகாரிக தர்மபால அவர்கள் இந்து மத குருவுடனும் பிரித்தானிய அரசுடனும் போராடி பௌத்தர்களின் அதி உன்னதமான புத்தகயாவை மீட்டெடுத்தார். புத்த பெருமான் ஞானம் பெற்ற அந்த இடம் இன்றும் பௌத்தர்களின் வணக்க வழிபாட்டுக்குரிய இடமாகப் பௌத்தர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதையிட்டு அனைத்து பௌத்தர்களும் அவருக்கு நன்றியுடையோராக இருக்க வேண்டும்.

- மகாபோதி சங்கத்தின் கிளைகளைக் கல்கத்தா, சாரணாத், டில்லி, புத்தகயா, பம்பாய், சென்னை முதலிய நகரங்களில் நிறுவினார்.

- சாரணாத் எனுமிடத்தில் ஒரு விகாரையை அமைத்தார்.

- இலண்டன் பௌத்த விகாரையை நிறுவியமை. இன்றும் அது அந்நாட்டில் வாழும் பௌத்தர்களுக்கு சமயத் தேவைகளை நிறைவேற்றி வரும் முக்கிய பௌத்த நிலையமாக விளங்குகின்றது.

> சிக்காக்கோ மாநகரில் இடம்பெற்ற மகாநாடொன்றில் பங்கு கொண்டு உரை நிகழ்த்தி இதயபூர்வமான வரவேற்பை பெறல்.
>
> தர்மபாலவின் நாட்குறிப்பு

- 1931இல் இறுதியாக இலங்கை வந்த தர்மபால அவர்கள் சிறிதேவமித்த எனும் பெயரில் துறவு பூண்டார்.

- 1933ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் திகதி வட இந்தியாவின் வாரணாசி நகரில் உள்ள சாரணாத்தில் வைத்து அநகாரிக தர்மபால அவர்கள் இவ்வுலகை நீத்தார்.

**செயற்பாடு**

1. அநகாரிக தர்மபாலாவின் சரிதையை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.
2. 19ஆம் நூற்றாண்டில் சமய மறுமலர்ச்சிக்காக சேவையாற்றிய பௌத்த, இந்து, இஸ்லாம் சமயத் தலைவர்களின் விபரங்களையும், உருவப்படங்களையும் உள்ளடக்கி கைநூல் ஒன்றைத் தயாரியுங்கள்.

## இந்து சமய மறுமலர்ச்சி

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மிஷனரி இயக்கங்களின் தீவிரமான செயற்பாடு காரணமாக இந்து சமயமும் கல்வியும் பாதிக் கப்பட்டன.



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

இந்து சமயமும் அதனோடிணைந்த சடங்கு சம்பிரதாயங்களும் அழிந்து விடாமல் பாதுகாப்பதற்காகத் தமிழ்த் தலைவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் இந்து சமய மறுமலர்ச்சி இலங்கையில் ஏற்பட்டது.

இந்து சமய மறுமலர்ச்சியின் முன் னோடியாகச் செயற்பட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆவார். அன்னார் இந்து சமயத் தையும் தமிழரின் பாரம்பரிய உரிமை களையும் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு செயற்பட்டார்.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (1822 - 1879) இந்து சமய மறுமலர்ச்சிக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள்**

- தமது சமயத்தின் முக்கியத்துவத்தையும் பாரம்பரியங்களையும் மீண்டும் கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டமை.
- இந்து சமயப் பிள்ளைகளுக்காகத் தனது வீட்டிலேயே வகுப்புக்களை ஆரம்பித்தமை.
- 1853இல் சைவ பரிபாலன சபை, இந்து கல்விச் சபை என்பவற்றை நிறுவியமை.
- 1897இல் வண்ணார்பண்ணையில் **''சைவப் பிரகாச வித்தியாசாலை''** எனும் பெயரில் தமிழ் மொழிமூலப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தமை.
(இப்பாடசாலையில் சைவசமயம் போதிக்கப்பட்டதுடன் தமது சம்பிரதாயங்களை மதித்து அவற்றைப் பின்பற்றுவதற்கு மாணவர்கள் பயிற்றப்பட்டனர். இப்பாடசாலை தமிழ் மொழியினதும் இந்து சமயத்தினதும் மறுமலர்ச்சி மத்திய நிலையமாகக் காணப் பட்டது.)

## ஆறுமுகநாவலரின் எழுத்துப் பணி

❖ புத்தகங்களை எழுதியமை, மொழிபெயர்ப்புச் செய்தமை, அவற்றை அச்சிட்டு வெளியிட்டமை என்பன அன்னாரின் எழுத்துப் பணிகளாகும்.

| | |
|---|---|
| புத்தகங்களை எழுதியமை | பாடநூல்களை எழுதி தமிழ் மாணவர்களுக்கு உதவினார். மூன்று பாகங்களாக வெளிவந்த பாலர் பாடம் எனும் பாடநூல் மாணவர் மத்தியில் பிரபல்யமான நூலாகும். |
| அச்சகம் ஒன்றை அமைத்தமை | சமய, கலாசார மறுமலர்ச்சிக்குப் பத்திரிகைகள் புத்தகங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த நாவலர் சொந்தமாக ஓர் அச்சகத்தை நிறுவினார். |
| கவிதை, உரைநடை, பாடல், மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டமை | கந்த புராணம், சேது புராணம், பெரிய புராணம், மணிமேகலை, சரசோதி மாலை, திருக்குறள் நாலடியார் முதலிய நூல்களை வெளியிட்டார். |

- ❖ தமது நோக்கங்களை அடையும் வகையில் ஆங்கில மொழியைப் புறக்கணிப்பது தமக்குப் பாதகமாக அமையும் என்பதைக் கருத்தில் கொண்ட நாவலர் அவர்கள் வண்ணார் பண்ணையில் ஓர் ஆங்கிலப் பாடசாலையையும் ஆரம்பித்தார்.

இவ்வாறு நாவலர் அவர்கள் கல்வியியலாளராகவும் சமயத்தலைவராகவும் சமூக சேவையாளராகவும் சைவ சமயத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் பாதுகாப்பதற்காக அரும்பாடுபட்டு உழைத்தார்.

## இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி

ஆங்கிலேயர் ஆட்சியில் இஸ்லாம் சமயமும் முஸ்லிம்களும் புறக்கணிக்கப்பட்டிருந்தனர். எனவே பௌத்த, இந்து சமய மறுமலர்ச்சி நிகழ்ந்த சம காலத்தில் இஸ்லாம் சமய மறுமலர்ச்சியும் இடம்பெற்றது. இதில் முன்னோடியாக செயற்பட்டவர் அறிஞர் சித்தி லெப்பை (1832 - 1898) ஆவார்.


அறிஞர் சித்திலெப்பை

- ❖ ஆரம்ப காலத்திலிருந்தே சித்தி லெப்பை அவர்களின் செயற்பாடுகளில் சமூக, சமய மேம்பாடு காணப்பட்டது. இக்காலகட்டத்தில் முஸ்லிம் பெண்கள் கல்வித்துறையில் பின் தங்கிக் காணப்பட்டனர். எனவே அவர் கண்டியில் முஸ்லிம் பெண்களுக்கான பாடசாலை ஒன்றை அமைத்தார்.
- ❖ முஸ்லிம்கள் அரபு மொழியையும், ஆங்கில மொழியையும் கற்பதன் அவசியத்தை உணர்த்தினார்.
- ❖ மத்ரஸா எனும் இஸ்லாமியப் பாடசாலை முறையை புனரமைப்புச் செய்தார்.
- ❖ 1882இல் மருதானையில் ஸாஹிராக் கல்லூரியை ஆரம்பித்தார்.
- ❖ முஸ்லிம் நேசன், ஞானதீபம் முதலிய பத்திரிகைகளை வெளியிட்டார்.

## மது ஒழிப்பு இயக்கம்

தேசிய கலாசாரத்தைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டதே மது ஒழிப்பு இயக்கமாகும்.

- ❖ இக்காலத்தில் பிரித்தானியர் தமது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக மதுபான வியாபாரத்தை அதிகரித்திருந்தனர்.

- ❖ ஆரம்பத்தில் மக்களுக்கு இலவசமாக மதுபானத்தை வழங்கி அவர்களை அதற்கு அடிமையாக்கிய பின்னர் விற்பனையை வெற்றிகரமாகத் தொடங்கினர்.

சமூக ஒற்றுமை, சமாதானம், உடல்நலம் எனும் அனைத்தும் மதுபானப் பாவனையால் மக்கள் மத்தியில் இல்லாதொழிவதை அவதானித்த தேசியத் தலைவர்கள் அதற்கு எதிராகச் செயற்படுவதற்காக மது ஒழிப்பு இயக்கத்தை ஆரம்பித்தனர்.



### செயற்பாடு

மது அருந்துவதன் தீமை பற்றி வகுப்பில் கலந்துரையாடுங்கள். எல்லா மாணவர்களுக்கும் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**மது ஒழிப்பின் பொருட்டு முன்னின்று உழைத்த தலைவர்கள்**

| | | |
|---|---|---|
| டி.சி சேனாநாயக்க | அநகாரிக தர்மபால | எப்.ஆர். சேனாநாயக்க |
| எட்வின் ஹேவாவிதாரண | டி.எஸ் சேனாநாயக்க | டி.பி.ஜயதிலக |
| பியதாச சிறிசேன | ஆத்தர் வீ தியெஸ் | டபிள்யூ. ஏ. சில்வா |

பிரித்தானிய அரசாங்கம் 1912 மே 31ஆம் திகதி மதுவரிச் சட்டத்தை அங்கீகரித்தல்

- ❖ நாடு முழுவதும் மதுபானக் கடைகள் திறக்கப்பட்டன.
- ❖ நகரங்கள், கிராமங்கள் தோறும் தொற்றுநோய்போல சாராயத் தவறணைகள் பரவலடைந்தன.
- ❖ ஆங்கிலேயர் எதிர்பார்த்தது போலவே அவர்களது வருமானம் பலமடங்கு அதிகரித்தது.
- ❖ தேசிய சமயங்களும், கலாசாரமும் மேலும் சீரழிந்தன.

**மது ஒழிப்பு இயக்கத்தின் செயற்பாடுகள்**

- ♦ நகரங்கள், கிராமங்கள் தோறும் பயணம் மேற்கொண்டு கலந்துரையாடல், கூட்டங்கள் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியமை.
- ♦ மது ஒழிப்பு இயக்கத்தின் கிளைகளைக் கிராமப்புறங்களில் நிறுவியமை
- ♦ பத்திரிகைகள், சஞ்சிகைகள் நூல்கள் மூலம் மதுவின் தீமைகளை விளக்கியதுடன் அப்பழக்கத்திலிருந்து விடுபடுவதற்கான வழியும் காட்டப்பட்டது.

இலங்கை மது ஒழிப்பு இயக்கத்தின் தந்தையாக ஆதர் வீ. தியெஸ் அவர்களைக் குறிப்பிடலாம். மக்களை மதுப்பழக்கத்திலிருந்து மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்ட இவ்வியக்கம் தேசப்பற்றுடைய தலைவர்களையும் ஒன்று சேர்த்தது. அரசியல் யாப்புச் சீர்திருத்த இயக்கத்துக்கும் இத்தேசியத் தலைவர்களாலேயே அத்திவாரமிடப்பட்டது.

மக்களை மது அருந்தும் பழக்கத்திலிருந்து காப்பாற்றும் பொருட்டு உழைத்த அனைவரும் இந்நாட்டு மக்களின் மதிப்பிற்கு உரியவராவார்.

மாணவர்களும், வாலிபர்களும், கற்றோர்களும், வளர்ந்தோரும், அரசியல் வாதிகளும், நாட்டு மக்களும் ஒன்றிணைந்து மதுவிற்கு அடிமையாகாத நாடாக எம் நாட்டைக் கட்டியெழுப்புவோம் என திடசங்கற்பம் கொள்வோம்.

## அரசியல் மறுமலர்ச்சி

சமய, கலாசார மறுமலர்ச்சி மற்றும் மது ஒழிப்பு இயக்கம் என்பனபற்றி இதுவரை அறிந்து கொண்ட நாங்கள் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் பற்றிக் கவனம் செலுத்துவோம்.

**19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் செயற்பட்ட அரசியல் இயக்கங்கள்**

- சிலாபச் சங்கம்
- கரைநாட்டு பெருந்தோட்ட உற்பத்தியாளர் சங்கம்
- இலங்கைச் சீர்திருத்தச் சங்கம்
- யாழ்ப்பாணச் சங்கம்

மேற்படி இயக்கங்கள் ஒவ்வொரு பிரதேசங்களிலும் தனித்தனியாக இயங்கின.

### இலங்கைத் தேசியக் காங்கிரஸ்

இதுவரை காலம் இலங்கையில் செயற்பட்ட இயக்கங்களினதும் பிரதிநிதிகளினதும் ஒன்றுபட்ட அமைப்பாக 1919இல் இலங்கைத் தேசியக் காங்கிரஸ் உருவானது. (Ceylon National Congress)

### இலங்கைத் தேசியக் காங்கிரஸ் உருவானதற்கான காரணங்கள்

1. 1915இல் ஏற்பட்ட சிங்கள முஸ்லிம் இனக் கலவரம்
2. மது ஒழிப்பு இயக்கம் மூலம் கிடைத்த பயிற்சி

**1915இல் ஏற்பட்ட சிங்கள முஸ்லிம் கலவரம்**

கம்பளை கஹட்டபிட்டிய பிரதேச பள்ளிவாசலின் முன்னால் சென்ற பௌத்த சமய ஊர்வலத்தின்போது ஏற்பட்ட பிரச்சினை கண்டி மற்றும் கொழும்பு போன்ற பிரதேசங்களிலும் பரவியது.

இக்கலவரம் இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஈடுபட்டிருந்த பிரித்தானிய ஏகாதியபத்தியத்துக்கு எதிரான கிளர்ச்சி எனத் தவறாகப் புரிந்து கொண்ட ஆளுநர் றொபட் சார்மஸ் கலவரத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

### ஆளுநர் ரொபட் சா்மஸின் நடவடிக்கைகள்

1. மார்ஷல் லோ எனும் யுத்த காலச் சட்டத்தைப் பிறப்பித்தார். ஆங்கிலப் படையினர் அப்பாவிச் சிங்களவர்களுடன் கடுமையாக நடந்து கொண்டனர்.
2. மது ஒழிப்பு இயக்கத் தலைவர்களான டீ.எஸ். சேனாநாயக்க, எப்.ஆர். சேனாநாயக்க, டீ.பீ. ஜயதிலக, எட்மன்ஹேவாவிதாரண, சீ.பட்டுவன்துடாவ, ஏ.ஈ. குணசிங்க முதலிய தலைவர்கள் விசாரணை இன்றிச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டனர்.

## இலங்கைத் தேசிய காங்கிரஸ் உதயம்

1915 இல் ஏற்பட்ட இனக்கலவரம் தொடர்பாக ஆளுநர் மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகள் பற்றி இலங்கையர் தமது கண்டனத்தைத் தெரிவித்தனர். இதன் பின்னர் இவ்வாறான நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகத் தாம் ஐக்கியப் படுதல் வேண்டும் என்பதைத் தலைவர்கள் உணர்ந்தார்கள்.

எனவே 1919ஆம் ஆண்டு தேசியக் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம், ஜேம்ஸ் பீரிஸ், திரு.ஈ.டபிள்யூ. பெரேரா, திரு.ஏ.ஈ. குணசிங்க, திரு.டி.பி.ஜயதிலக, திரு.டி.எஸ். சேனநாயக்க, திரு.எப்.ஆர்.சேனாநாயக்க ஆகியோர் ஆரம்ப அங்கத்தவர்களாவர்.

### இலங்கைத் தேசிய காங்கிரசின் நோக்கங்கள்

1. சட்டவாக்கக் கழகத்தை விரிவுபடுத்தல்
2. அதன் அதிகாரத்தை அதிகரித்தல்
3. சுதேசத் தலைவர்கள் நிர்வாகத்தில் கூடுதல் பங்கு பெறுவதற்கு சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொள்ளல்.

### தமது நோக்கங்களை அடைவதற்காக இலங்கைத் தேசிய காங்கிரஸ் மேற்கொண்ட நடவடிக்கைகள்

- பிரித்தானிய அரசுக்கு மனுக்களைச் சமர்ப்பித்தல்.
- குடியேற்ற நாட்டுக் காரியதரிசியிடம் தூதுக்குழுக்களை அனுப்புதல்
- கூட்டங்களை நடாத்தி மக்களை விழிப்பூட்டுதல்
- சட்டவாக்கக் கழகத்தில் வாதங்கள் புரிவதன் மூலம் ஆளுநரின் கவனத்தை ஈர்த்தல்.
- பத்திரிகை மூலம் சீர்திருத்தத்தின் அவசியத்தைத் தெளிவுபடுத்துதல்.

1920, 1924, 1931 ஆம் ஆண்டு யாப்புச்சீர்திருத்தங்களைப் பெற்றுக் கொள்வதில் காங்கிரஸ் முன்னின்று உழைத்தது.

### அரசியல் கட்சிகளின் தோற்றம்

1928இல் ஏ.ஈ குணசிங்க அவர்களின் தலைமையில் தொழிலாளர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. போராட்டத்தின் மூலம் தொழிலாளரின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதே இதன் நோக்கமாகும். இக்கட்சி 1947 இல் நடைபெற்ற தேர்தலில் ஒரு தொகுதியில் வெற்றியும் பெற்றது.

### லங்கா சமசமாஜக் கட்சி 1935

பிரித்தானியாவில் மேற்படிப்பை மேற்கொண்டு நாடு திரும்பியிருந்த இடதுசாரித் தலைவர்கள் சிலர் அரசியல் கட்சிகளின் அவசியத்தை உணர்ந்தனர். பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை, அதில் அரசியல் கட்சிகளின் பங்கு என்பன பற்றி அவர்கள் அங்கு அனுபவங்களைப் பெற்றிருந்தனர். எனவே இக்கட்சியை ஸ்தாபித்தனர். முதல் முதல் உருவாக்கப்பட்ட கட்சி இதுவாகும். முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதே இக்கட்சியின் நோக்கமாக இருந்தது. கலாநிதி என்.எம். பெரேரா இக்கட்சியின் தலைவரானார். மேலும் கொல்வின் ஆர்.டி.சில்வா, எஸ்.ஏ.விக்ரமசிங்க பிலிப் குணவர்த்தன, லெஸ்லி குணவர்த்தன ஆகியோரும் அதன் ஆரம்ப உறுப்பினராவர்.

1936 ஆம் ஆண்டு பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தலுக்கு இக்கட்சி தன்னை ஒழுங்கமைத்தது.

### 1943 இல் லங்கா சமசமாஜக் கட்சியில் ஏற்பட்ட பிளவு

1. லங்கா சமசமாஜக் கட்சியில் ஏற்பட்ட முதலாவது பிளவினால் எஸ்.ஏ. விக்ரமசிங்க தலைமையில் கொமியூனிஸ்ட் கட்சி உருவானது.

2. லங்கா சமசமாஜக் கட்சியில் ஏற்பட்ட இரண்டாவது பிளவினால் கொல்வின் ஆர்.டி.சில்வா தலைமையில் போல்சவிக் லெனினிசக் கட்சி உருவானது.

**ஐக்கிய தேசியக்கட்சி**

1947 இல் சோல்பரி யாப்பு இலங்கைக்குப் பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை ஒன்றை அறிமுகப்படுத்தியது. எனவே பொதுத் தேர்தல் ஒன்றில் போட்டியிடும் அரசியல் கட்சிகளில் இருந்து மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டிய தேவை எழுந்தது. எனவே அச்சமயம் இலங்கைத் தேசிய காங்கிரஸ் தலைவராக இருந்த டீ.எஸ். சேனாநாயக்க அவர்கள் முஸ்லிம் சங்கம், சிங்கள மகா சபை, லங்கா சேவா சங்கம் என்பவற்றை இணைத்து 1946 இல் ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்கினார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஸ்தாபகர் தேசபிதா டி.எஸ் சேனாநாயக்க ஆவார்.

இரண்டாம் பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1947 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தல் முடிவுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்.

1947 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்முதல் இன்றுவரை இலங்கையில் கூட்டுக்கட்சி முறையே நிலவி வருகிறது.

பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் கோரிக்கைகளின் விளைவாக 1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. தாம் இழந்திருந்த சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கைத் தலைவர்கள் தமது சொத்து, செல்வம், காலம் முதலியவற்றைத் தியாகம் செய்தனர். எனவே அவர்களை நாம் நன்றியுடன் நினைவு கூருவோம்.

1948 ஆம் ஆண்டு பெற்ற சுதந்திரத்தை அர்த்தமுள்ளதாக்க நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெறுவதற்கு சிறப்பாகப் பணியாற்றிய தலைவர்கள் சிலரைப் பற்றிக் கற்போம்.

### சேர். பொன்னம்பலம் அருணாசலம் (1853 - 1924)

இங்கிலாந்தில் உயர் கல்வி பெற்று நாடுதிரும்பிய சேர் பொன். அருணாசலம் அவர்கள் இலங்கை சிவில் சேவையில் இணைந்து செயல் திறமையுடன் கடமையாற்றினார்கள்.

1913 இல் சிவில் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அவர் ஐரோப்பாவுக்குச் சென்ற அதே வேளை சமூகசேவை, தொழில் சங்கம், நகர சபை என்பன பற்றி

ஆய்வுகள் செய்து நாடு திரும்பினார். அன்றிலிருந்து பல்வேறு சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்தி அர்ப்பணிப்புடன் பணியாற்றினார்.



சேர். பொன்னம்பலம் அருணாசலம்

- 1915இல் இலங்கையில் சமூக சேவைகள் முன்னணியை ஆரம்பித்து அதன் தலைவராக நின்று சேரிப்புற மக்களின் நல்வாழ்வுக்கான சேவைகளில் ஈடுபட்டார்.
- 1915இல் இடம்பெற்ற சிங்கள முஸ்லிம் கலவரத்தின் போது பிரித்தானியர் மேற்கொண்ட நடவடிக்கைளை எதிர்ப்பதற்காக எல்லா இனத்தவரும் ஒன்றுபட வேண்டுமெனக் கோரினார்.
- 1917இல் **'எமது அரசியல் தேவை'** எனும் தலைப்பில் ஆற்றப்பட்ட உரையின் மூலம் சுதந்திரப் போராட்டத்துக்காகத் தலைவர்கள் ஒன்று சேர வேண்டிய அவசியத்தைச் சுட்டிக்காட்டினார்.
- 1919இல் உருவான இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாவதற்கு முன்னின்று உழைத்த அவர் அதன் முதலாவது தலைவரானார்.
- இலங்கைப் பல்கலைக்கழகத்தை அமைப்பதில் முன்னின்று உழைத்தார்.
- நூல்களை எழுதியதன் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கும் வரலாறு கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தினார்.

- பழைய பாராளுமன்ற முன்றலில் உலோகத்தினால் அவரின் உருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.
- பேராதனைப் பல்கலைக்கழக அருணாசலம் விடுதியும் அவரை நினைவுபடுத்துகிறது.

### செயற்பாடு



சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது செயல்களை உள்ளடக்கி பத்திரிகைக்குக் கட்டுரை ஒன்றை எழுதுங்கள்.

## திரு டீ.பீ.ஜயதிலக (1868 - 1944)

''என்னுடைய நோக்கம் தாய் நாட்டுக்கு சேவை செய்வதே தவிர புகழ் தேடுவதல்ல''
ஆனந்தாக் கல்லூரியில் ஆற்றிய உரையிலிருந்து



திரு. டீ.பீ.ஜயதிலக

வித்தியாலங்கார பிரிவெனாவிலும் தர்மராம தேரரிடமும் பெற்றுக் கொண்ட பௌத்த கல்வி அவரின் வாழ்வை ஒளிமயமாக்கியது. பிரித்தானியாவில் கல்வி கற்றுப் பௌத்த கல்வியின் எழுச்சிக்கான நடவடிக்கைளை மேற்கொண்டார்.

- 1890இல் தர்மராஜ கல்லூரியின் நிர்வாகியாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- 1898இல் ஆனந்தக் கல்லூரியின் உப அதிபரானார்.
- 1900இல் ஆனந்தாக் கல்லூரியின் அதிபர் ஆனார் இந்த பௌத்த பாடசாலைகளை மிஷனரி பாடசாலை களுக்கு ஈடான வகையில் அபிவிருத்தி செய்வதற்கு அவர் அரும்பாடுபட்டார்.
- பௌத்த இளைஞர் சங்கத்தை ஆரம்பித்ததன் மூலம் ஞாயிறு அறநெறிப் பாடசாலைகள் நடைபெறுவதற்கு வழிவகுத்தார்.
- பௌத்த இளைஞர் சங்கத்துக்காக எவ்.ஆர். சேனாநாயக்காவின் நிதியுதவியுடன் பொறளையில் ஒரு கட்டடத்தை நிர்மாணித்தார்.

இன்றுவரை இலங்கையில் பௌத்த இளைஞர் சங்கம் ஞாயிறு அறநெறிப் பாடசாலை பரீட்சைகளை நடத்துவதில் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

- 1915இல் சிங்கள-முஸ்லிம் இனக்கலவரத்தின் போது ஏகாதிபத் தியவாதிகளால் சிறையில் அடைக்கப்பட்ட அவருக்கு மரண தண்டனை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. நீண்ட வாதப் பிரதிவாதங்களின் பின்னர் அவர் அதிலிருந்து விடுவிக்கப்பட்டார்.
- சிறையிலிடப்பட்ட தலைவர்களை மீட்பதற்குப் பிரித்தானியா சென்ற பயணத்தில் டீ.பீ. ஜயதிலக அவர்களும் கலந்து கொண்டார். அதன் பயனாகச் சிறைப்பட்ட தலைவர்களை விடுதலை செய்து கொள்ள முடிந்தது.
- 1919இல் உருவான இலங்கைத் தேசிய காங்கிரஸின் நடவடிக்கைகளிலும் பங்குபற்றினார்.
- 1924இல் சட்டவாக்கக் கழக உறுப்பினராக அங்கத்துவம் பெற்றார்.
- 1931 இல் களனித் தொகுதியிலிருந்து அரசுக் கழக உறுப்பினராகத் போட்டியின்றித் தெரிவானார்.

- இலங்கைத் தேசிய காங்கிரஸின் தலைமைப் பதவியை அலங்கரித்த இவர் மக்கள் நலன் கருதி பல திட்டங்களை முன்வைத்தார்.
- திரு.டீ.பீ.ஜயதிலக தன் இறுதிக் காலத்தில் உயர் ஸ்தானிகராக இந்தியாவில் கடமை புரிந்தார்.

பௌத்த விழிப்புணர்வுக்கும் நாட்டின் சுதந்திரத்திற்கும் தனது பணத்தையும், காலத்தையும் செலவு செய்த உன்னத தலைவரான டீ.பீ. ஜயதிலக அவர்களின் பெயர் இலங்கை வரலாற்றில் அழியாத இடத்தைப் பெற்றுள்ளது.

## சேர்.பொன்னம்பலம் இராமநாதன் (1851 - 1930)

இந்து சமய மறுமலர்ச்சிக்காக யாழ்ப்பாணத்தில் இந்துப் பாடசாலைகளை நிறுவுவதற்காக தனது சொந்த நிதியிலிருந்து செலவு செய்த சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஓர் உன்னத தலைவராவார். யாழ். பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி என்பன அன்னாரின் முயற்சியில் உருவானவையாகும். இப்பாடசாலைகள் இந்து சமய மறுமலர்ச்சியில் அளப்பரிய சேவையாற்றியுள்ளன.


சேர் பொன் இராமநாதன்

அன்னாரின் சேவைகள் சமயத்துடன் மாத்திரம் வரை யறுக்கப்பட்டதல்ல. ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து இலங் கையை மீட்டெடுப்பதற்கும் அவர் சிறந்த பங்களிப்புச் செய் துள்ளார்.

- 1879இல் சட்டவாக்கக்கழக உறுப்பினராக இருந்தபோது நாட்டுக்கான பல நல்ல சேவைகளைச் செய்த சேர் பொன் இராமநாதன் அவர்கள் இலங்கை சட்டக் கல்லூரியை அமைப்பதிலும் முன்னோடியாகச் செயற்பட்டார்.
- 1910இல் அறிமுகமான குறூ மக்கலம் யாப்புச் சீர்திருத்தத்தின்போது கல்வி கற்ற இலங்கையர் சார்பில் வாக்குரிமை மூலம் தெரிவான முதல் இலங்கையர் சேர்.பொன் இராமநாதன் ஆவார். சிங்கள அபேட்சகர்களை தோல்வியடையச்செய்து வெற்றி பெறுமளவிற்கு அன்னார் பிரபலமானவராயிருந்தார்.
- 1915இல் சிங்கள முஸ்லிம் இனக்கலவரத்தின் போது சிறையிலடைக்கப்பட்ட சிங்களத் தலைவர்களை விடுதலை செய்வதற்காக இரண்டாம் உலக மகாயுத்தம் நடைபெற்ற வேளையில் தனது உயிரையும் துச்சமாக மதித்து இரகசியமாக பிரித்தானியா சென்று குடியேற்ற நாட்டுக் காரியதரிசியை சந்தித்து காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி நாடு திரும்பினார்.

- இலங்கைத் தேசிய காங்கிரஸின் உறுப்பினரான இவர், ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு தனது ஒத்துழைப்பை வழங்கினார். சுதந்திரத்துக்காக சிங்கள மக்களுடன் கைகோர்த்துச் செயற்பட்டார். அதனால் இவர் என்றும் இலங்கையரின் கௌரவத்துக்குரியவராவார்.

சேர்.பொன் இராமநாதனை மதிக்கும் வகையில் பேராதனைப் பல்கலைக்கழக விடுதி ஒன்று அன்னாரின் பெயரைத் தாங்கியுள்ளது.

## திரு.ஈ.டபிள்யு. பெரேரா (1875 - 1953)

இவர் பிறப்பினால் ஒரு கிறிஸ்தவராக இருந்த போதும் 1915இல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது பிரித்தானிய ஆட்சியாளர் சிங்கள, பௌத்த தலைவர்கள் மீது மேற்கொண்ட நடவடிக்கைகளைக் கண்டு மன வேதனைப்பட்டார்.

ஆங்கில ஆட்சியாளர் யுத்தகால சட்டத்தை அமுல்படுத்தி ஹென்றி பேதிரிஸ் முதலிய இளைஞர்களைக் கொலை செய்து சிங்களத் தலைவர்களை சிறையிலடைத்ததைப் பெரேரா அவர்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை.

- இந்த சந்தர்ப்பத்தில் பிரித்தானிய அரசாங் கத்திடம் மனு ஒன்றைச் சமர்ப்பிப்பதற்காக சில சிங்களத் தலைவர்கள் நடவடிக்கை மேற் கொண்டனர்.
- சிலர் கூடிக்கலந்துரையாடுவது பயங்கரமான விளைவுகளைத் தரக்கூடிய அக்கால கட்டத்தில், அவர் தனது வீட்டில் அச்சமின்றி கலந்துரை யாடல்களுக்கு இடம் கொடுத்தார்.
- சேர்.பொன்.இராமநாதன், ஜேம்ஸ் பீரீஸ், ஹென்றி டி.மெல் முதலியோரின் இரகசிய கலந் துரையாடலில் பெரேரா அவர்களும் கலந்து கொண்டு குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு மனு சமர்ப்பிக்க முடிவு செய்தனர்.



ஈ.டபிள்யூ. பெரேரா

- பிரித்தானியருக்கு எதிரான இந்த மனுவை எடுத்துச் செல்வது முதலாம் உலக யுத்தம் நடைபெற்ற அக்காலக்கட்டத்தில் மிக அபாயகரமானதாக விளங்கியது. என்றாலும் பெரேரா அவர்கள் குடியேற்ற நாட்டு செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டிய மனுவை தனது பாதணிக்குள் வைத்து பயமின்றிப் பாதுகாப்பாக எடுத்துச் சென்றார்.

- மிகச் சிரமமான இக் கடற்பயணத்தில் பெரேரா அவர்களுடன் சேர். பொன் இராமநாதனும் டீ.பீ. ஜயதிலக அவர்களும் பங்கேற்றனர்.

**அந்தத் தூதுக்குழுவின் முயற்சியால்**

- 1915ஆம் ஆண்டு கலவரத்தில் சிங்களத் தலைவர்களை முறைகேடாக நடத்திய ஆளுநர் பதவி நீக்கப்பட்டார்.
- இதன் பயனாக புதிய யாப்புச் சீர்திருத்தம் ஒன்றையும் பெற்றுக் கொள்ள முடிந்தது.
- 1926இல் ஈ.டபிள்யு.பெரேரா அவர்கள் இலங்கைத் தேசிய காங்கிரஸின் தலைவரானார்.
- டொனமூர் ஆணைக்குழுவின் முன்னால் இலங்கை காங்கிரஸ் சார்பாக சாட்சியமளித்த குழுவின் தலைவராகவும் அன்னார் செயற்பட்டார்.

ஈ.டபிள்யு. பெரேரா அவர்களின் தீரமிகு செயற்பாடு காரணமாக அவர் 'கோட்டைசிங்கம்' எனும் பெயர் பெற்று வரலாற்றில் இடம் பிடித்தார். மேலும் 1815இல் இங்கிலாந்து கொண்டு செல்லப்பட்ட இலங்கையின் தேசியக் கொடியை மீண்டும் இலங்கைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டார்.

**செயற்பாடு**



ஈ.டபிள்யு.பெரேரா அவர்களின் வீரச் செயல் பற்றி சுவர்ப்பத்திரிகைக்குக் கட்டுரை ஒன்றை எழுதி, அதனைப்பற்றி வகுப்பில் கலந்துரையாடுங்கள்.

**திரு.எப்.ஆர். சேனாநாயக்க (1882- 1926)**

தனது கல்வியை முடித்து நாடு திரும்பிய அன்னார் ஏகாதிபத் தியவாதிகளிடம் இருந்து நாட்டைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

1912இல் மதுவரிச்சட்டம் அமுலானதைத் தொடர்ந்து நாடு முழுவதும் திறக்கப்பட்ட மதுபானக் கடைகள் மக்களின் அன்றாட வாழ்க்கையை சீரழித்து விடாமல் பாதுகாப்பதற்காக அவர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

- ஹாபிட்டிகம் கோரளையில் ஒவ்வொரு கிராமத்திலும் மது ஒழிப்புச் சங்கங்களை ஆரம்பித்தமை. இவ்வனைத்து மது ஒழிப்பு சங்கங்களையும் இணைத்து ஹாபிட்டிகம் கோரளையில் மகா மது ஒழிப்புச் சபையை நிறுவியமை

* ''மோனிங் லீடர்'' பத்திரிகை மூலம் மது ஒழிப்பு இயக்கம் பற்றி மக்களை அறிவூட்ட நடவடிக்கை மேற்கொண்டமை.
* 1915இல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது ஆங்கிலேய ஆட்சியாளர்களின் அடாவடித்தனங்களைக் கண்டித்ததால் சிறைவைக்கப்பட்டு ஒன்றரை மாதங்களில் விடுதலை பெற்றதுடன் ஏனைய தலைவர்களின் விடுதலைக்காக செயற்பட்டமை.
* பிரித்தானியாவுக்கு தூது சென்ற திரு ஈ.டபிள்யூ. பெரேராவினதும் அவரைத் தொடர்ந்து சென்ற தலைவர்களினதும் செலவுகளை இவரே பொறுப்பேற்றுக் கொண்டமை.
* பிரித்தானியரின் பிடியிலிருந்து விடுபடுவதற்கு தேசிய ஒற்றுமையின் பெறுமதியை விளங்கிக் கொண்டு 1919இல் இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாவதில் முன்னோடியாக செயற்பட்டமை.
* அச்சகமொன்றை அமைத்து அதன் மூலம் பத்திரிகை, சஞ்சிகைகளை வெளியிட்டு மக்களுக்கு அறிவூட்டியமை.
* பிரம்மஞான சங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் பௌத்த கல்விக்காக அனுசரணை வழங்கியமை வித்யோதய பிரிவெனாவுக்கு உதவிகள் செய்தமை. கொழும்பு பௌத்த இளைஞர் சங்கத்துக்கு நிதியுதவி செய்தமை. இலங்கையில் பல்வேறு இடங்களிலும் விகாரைகள் கட்டுவதற்கு நிதியுதவி வழங்கியமை போன்றன அன்னாரின் சேவைகளாகும்.



F.R. சேனாநாயக்கா

எப்.ஆர்.சேனாநாயக்க அவர்கள் தனது சொந்த நிதியை நாட்டுக்காகச் செலவு செய்த ஓர் உதாரண தலைவராவார். இவரை நினைவு கூறுமுகமாகப் பழைய பாராளுமன்றத்தின் முன்னால் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

## திரு.ஏ.ஈ.குணசிங்க (1891 - 1967)

கண்டி தர்மராஜ வித்தியாலயத்தில் கல்வி பயின்ற குணசிங்க அவர்கள் அக்கால சமூகத்தில் நிலவிய ஏகாதிபத்தியவாதிகளின் கீழ் தொழிலாளர்கள் சமூகம் துயரமான வாழ்க்கையை மேற்கொள்வதை அவதானித்தார்.

* 1915இல் இளைஞர் இலங்கை மன்றத்தை ஆரம்பித்து இப் பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட்டார்.
* 1915இல் சிங்கள, முஸ்லிம் இனக்கலவரத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றார்.

- சிறையிலிருந்து வெளியேறிய குணசிங்க அவர்கள் நேஷன் எனும் ஆங்கிலப் பத்திரிகையை ஆரம்பித்தார்.
- 1919 இல் உருவான இலங்கை தேசிய காங்கிரஸின் உறுப்பினர்களுள் தீவிரவாதக் குழுவினரின் தலைவராகச் செயற்பட்டார்.


A.E. குணசிங்க அவர்கள்

- தொழிலாளர் உரிமைகள் சிலவற்றை வென்றெடுப்பதற்கு நடவடிக்கை மேற் கொண்டார்.
  - 1923இல் பாரியளவில் புகையிரதசேவை வேலை நிறுத்தம்
  - 1924இல் ட்ரம்கார் தொழிலாளர் வேலை நிறுத்தம் வெற்றியாக அமைந்தது.

- தொழிலாளர் தலைவரான குணசிங்க தொழிலாளரின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக 1928இல் இலங்கைத் தொழிலாளர் சங்கம் எனும் அமைப்பை நிறுவினார்.
- ஆங்கில ஆட்சியாளர் தலைவரி செலுத்தாதோரை சிறையில் அடைத்தனர். எனவே தலைவரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர் பாதையில் கல்லுடைக்கும் போராட்டத்தை முன்னெடுத்தார்.
  - ஏ.ஈ. குணசிங்க அவர்களின் மேற்படி போராட்டத்தைக் குறிக்கும் முகமாக கொழும்பு வாழைத்தோட்டத்தில் அவர் பாரிய கருங்கல் ஒன்றை சுத்தியல் கொண்டு உடைப்பதைச் சித்தரிக்கும் சிலையொன்று வைக்கப்பட்டுள்ளது.
  - இன்று இப்பிரதேசம் குணசிங்கபுர என்ற பெயரிலேயே அழைக்கப்படுகின்றது.
- குணசிங்க அவர்கள் மத்திய கொழும்பு உறுப்பினராக மக்கள் வாக்குகள் மூலம் அரசுக் கழக அங்கத்தவரானார்.
- கொழும்பு மாநகர சபையின் முதலாவது சிங்கள மேயர் என்ற பெருமையையும் குணசிங்கவையே சாரும்.
- பௌத்த சமய வளர்ச்சிக்கு கைகொடுத்த அதேவேளை அநகாரிக தர்மபால அவர்கள் புத்தகாயாவை மீட்டெடுப்பதற்காக மேற்கொண்ட போராட்டத்துக்கும் கைகொடுத்து உதவினார்.

## திரு.சீ.டபிள்யு.டபிள்யு கன்னங்கர (1884 - 1969)

### இலவசக்கல்வியின் தந்தை



C.W.W. கன்னங்கரா

வறுமையான குடும்பத்தில் பிறந்த கன்னங்கரா அவர்கள் கல்வி கற்பதில் அதிக ஆர்வமும் திறமையும் மிக்கவர். காலி ரிச்மண்ட் கல்லூரியில் புலமைப்பரிசில் மூலம் உயர்கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றார். அக்கல்லூரியில் உயர்கல்வி கற்கும் காலத்தில் அவர் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ் தான் அனுபவிக்கும் துன்பங்களைத் தனது சந்ததியினர் அனுபவிக்க விடக்கூடாது என்ற உயர் இலட்சியத்துடன் செயற்பட்டார். தனது கல்வியை முடித்துக் கொண்ட அவர் 1910இல் காலி ரிச்மண்ட் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். பின்னர் மொரட்டுவ வேல்ஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

- 1915ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் சிறையிலடைக்கப்பட்ட தலைவர்களை மீட்கும் போராட்டத்தில் பங்கு கொண்ட கன்னங்கர அவர்கள் அரசியலில் ஈடுபாடு காட்டினார்.
- 1923 இல் சட்டவாக்கக் கழகத்திற்கு உறுப்பினராகத் தெரிவானார்.
- 1930 இல் இலங்கைத் தேசிய காங்கிரஸ் தலைவரான அவர் தொடர்ந்து சிங்கள மகாசபையின் உபதலைவராகவும் பணியாற்றினார்.
- 1931இல் காலித் தொகுதியில் போட்டியிட்ட எதிர் அபேட்சகரை விட இருமடங்கு வாக்குகள் கூடுதலாகப் பெற்று அரசுக்கழக உறுப்பினராகத் தெரிவானார்.
- அரசுக்கழகத்தில் கல்வி அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொண்ட அவர் 1947ஆம் ஆண்டு வரை அப்பதவியை வகித்து இலங்கையருக்கு அளப்பரும் சேவையாற்றினார்.
- 1946ஆம் ஆண்டு ஒக்டோபர் 6ஆம் திகதி கன்னங்கர அவர்களால் கொண்டுவரப்பட்ட கல்விச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால் இலங்கைக் கல்வித்துறை புதிய பரிணாமம் கண்டது. திறமையிருந்தும் பணமில்லாத காரணத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த கிராமப்புற மாணவர்களும் கல்வி கற்கும் வாய்ப்பு அதனால் கிட்டியது.

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம்வரை இலவசக் கல்வியைப் பெறும் வாய்ப்பு இலங்கை மாணவர்களுக்குக் கிடைத்தது. மேலும் தேர்தல் தொகுதி தோறும் அன்னார் மத்திய பாடசாலைகளை நிறுவித் திறமைவாய்ந்த

மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கி அக்கல்லூரிகளில் பயிலும் வாய்ப்பளித்தார். இலவசக் கல்வியின் மேம்பாட்டுக்காக ஆரம்பப்பிரிவில் பாடசாலைகளில் தாய்மொழியிலே கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார். இலவசக் கல்வியைப் பெற அவர் செய்த சேவை காரணமாக அவர் ‘‘இலவசக் கல்வியின் தந்தை’’ என அழைக்கப்படுகின்றார்.

கல்வியைப் புத்தகங்களால் மாத்திரம் வரையறுத்து விடாமல் மாணவர்களின் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்குரிய வசதிகளையும் பெற்றுக் கொடுத்தார்.

நாடெங்கிலும் கிராமங்கள்தோறும் கல்விமான்கள் உருவாவதற்கு அன்னாரின் சேவைகளே காரணமாய் அமைந்தன.

இலவசக் கல்வியால் பயனடையும் நாமனைவரும் கன்னங்கர அவர்களுக்கு நன்றியுடையோராய் இருக்க வேண்டும்.

அன்னாரின் சேவையை நாளைய சந்ததியினரும் அறிந்துக்கொள்ளும் வகையில் அன்னாரின் உருவப்படமொன்றை பாடசாலைகளில் வைத்திருப்பது நற்பண்பாகும்.

**செயற்பாடு**

சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரா அவர்களின் நினைவு தினத்தைக் கொண்டாடுங்கள். அவரது புகைப்படம் பாடசாலையில் இல்லாவிடின் அதனைத் தேடிப் பெற்று பாடசாலையில் பொருத்தமான இடத்தில் காட்சிப்படுத்துங்கள். வகுப்பில் ஒவ்வொரு மாணவரும் 2 அல்லது 3 நிமிடம் அவரைப் பற்றிப் பேச்சொன்றை நிகழ்த்துங்கள்.

## திரு.எஸ்.ஏ.விக்ரமசிங்ஹ (1901 - 1981)


S.A. விக்ரமசிங்க

காலி மகிந்த கல்லூரியிருந்து கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்கு வந்த மாணவனான விக்ரமசிங்ஹ சங்கங்களில் இணைந்து பௌத்த விவகாரங்களிலும் சமூக சேவையிலும் ஈடுபட்டார்.

உயர் கல்விக்காகப் பிரித்தானியா சென்ற விக்ர மசிங்ஹ அவர்கள் என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி சில்வா, லெஸ்லி குணவர்த்தன முதலிய மாணவர்களுடன் பழகும் வாய்ப்பினைப் பெற்றார்.

1927இல் லண்டன் இலங்கையர் சங்கத்தின் இணைச் செயலாளராகும் வாய்ப்பைக் கொல்வின் ஆர்.டி.சில்வாவுடன் விக்ரமசிங்ஹ பெற்றுக் கொண்டார்.

ஒரு வைத்தியராகத் தாய்நாடு திரும்பிய விக்ரமசிங்க அவர்கள் ஏகாதிபத்திய விரோதி என்பதால் அவருக்கு அரசாங்க வைத்தியராக நியமனம் பெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டன. அவ்வாறு கிடைத்த நியமனமும் பறிக்கப்பட்ட பின்னர் அன்னார் மாத்தறையில் தான் பிறந்த ஊரில் தனியார் வைத்தியராகத் தனது புதிய பயணத்தை ஆரம்பித்தார்.

அன்னாரின் சேவைகள் அவரை ஒரு தேசப்பற்று மிக்க மனிதாபி மானமுள்ள மனிதராக வெளிக்காட்டின.

- இலங்கைத் தேசிய இயக்கத்தில் இளைஞர்களுடன் அரசியலில் பிரவேசித்தார்.
- 1931இல் அரசுக்கழக அங்கத்தவராகத் தெரிவான விக்ரமசிங்ஹ அவர்கள் அரசுக் கழகத்தினுள் பூரண சுதந்திரம் கேட்டுக் குரல் எழுப்பினார்.
- சுயமான அரசொன்றைக் கோரி 1932இல் மாத்தறை இளைஞர் சங்கத்தை உருவாக்கினார்.
- பொப்பி மலர் இயக்கம் ஏகாதிபத்திய நலன் காப்பதால் அதனை எதிர்த்தார்.
- அநாதரவான மக்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்ட சூரிய மலர் இயக்கத்தக்கு ஆதரவு நல்கினார்.
- 1935இல் உருவான இலங்கை சமசமாஜக் கட்சியிலிருந்து இடைவிலகி ஜனசக்தி பத்திரிகையில் பூரண சுதந்திரம் பற்றிய கட்டுரைகளை எழுதினார்.
- அப்பத்திரிகையில் அவர் எழுதிய முதலாவது ஆக்கத்துக்காக சிறை வாசமும் அனுபவித்தார்.
- மாக்ஸ், லெனின் கல்வி நிலையத்தை நிறுவி கொமியூனிசக் கருத்துக் களைப் பரப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.
- 1940இல் ஐக்கிய சோசலிசக் கட்சியை ஆரம்பித்து தொழிலாளர் உரிமைகளை வெற்றிகொள்ள உழைத்தார்.
- 1943இல் கொமியூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்து அதன் தலைவராக செயற்பட்டார்.

> ''வெற்றி, சுதந்திரம், சமூக வளர்ச்சி என்பவற்றுக்காக ஒன்றி ணைவோம்'' இதுவே அக்கட்சியின் சுலோகமாக அமைந்தது.

- ''எதிர்கால வழி'' எனும் நூலை எழுதி இலங்கையின் எதிர்காலப் பொருளாதாரத்துக்கு வழிகாட்டினார்.
- 1932,1933ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரம்மஞான சங்கத்தின் கீழிருந்த 300 பாடசாலைகளின் பொது முகாமையாளராக அர்ப்பணிப்புடன் பணி யாற்றினார்.

ஏகாதிபத்திய விரோதியும் மானுட நேயம் மிக்கவருமான எஸ். ஏ. விக்ரமசிங்ஹ அவர்கள் இலங்கையருக்கு இடதுசாரி அரசியலை அவ்வாறே தொடர்வதற்கு வழிவகுத்த தேசிய வீரராவார்.

## டி.பி. ஜாயா (1890 - 1960)

- 1890ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கலகெதர எனுமிடத்தில் பிறந்த டி.பி. ஜாயா 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் இலங்கைத் தேசிய இயக்கத்தினதும் இஸ்லாமிய மக்களினதும் நலனுக்காக நடவடிக்கைகளை மேற்கொண்டார்.
- உவேல்ஸ் குமார வித்தியாலயம் தர்மராஜா வித்தியாலயம், ஆனந்த வித்தியாலயம் ஆகிய முன்னணிப் பாடசாலைகள் பலவற்றில் ஆசிரியராக சேவையாற்றிய திரு.ஜாயா முஸ்லிம் மக்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதில் அக்கறை காட்டினார்.


டி.பி. ஜாயா

- தான் இணைஆசிரியராகப் பணியாற்றிய சிலோன் முஸ்லிம் ரிவ்யு (Review) சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரை மூலமாக முஸ்லிம் மக்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் பற்றி உணரச் செய்தார்.
- அக்காலத்தில் முஸ்லிம் தலைவர்கள் சேர்ந்து கட்டியெழுப்பியிருந்த முஸ்லிம் சங்கத்தின் ஊக்கமான உறுப்பினரான டி.பி ஜாயா 1919இல் தேசிய சங்கத்தில் உறுப்பினராகி சமகால சிங்கள, தமிழ் தலைவர்களுடன் இணைந்து பிரித்தானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் முன்னோடியாகச் செயல் பட்டார்.
- வீழ்ச்சியுற்றிருந்த சாகிராக்கல்லூரியின் அதிபராக 1921இல் பதவியேற்ற இவர் பல்வேறு பிரதேசங்களிலும் அதன் கிளைகளை நிறுவி வளர்ச்சியடையச் செய்தார்.
- 1924இல் சட்டசபைக்குத் தெரிவான டி.பி ஜாயா நியமனப் பிரதிநிதியாக 1936 - 1947ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்க சபையில் சேவை புரிந்தார்.
- 1946இல் ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கப்பட்ட போது முஸ்லிம் சங்கத்தோடு டி.எஸ் சேனாநாயக்காவுடன் இணைந்தார். இதன் போது டி.பி ஜாயாவுக்கு அக்கட்சியின் உபதலைவர் பதவி கிடைத்தது.
- 1947இல் முதலாவது பாராளுமன்றத்துக்கு மத்திய கொழும்பின் இரண்டாவது பிரதிநிதியாகத் தெரிவான இவர் டி.எஸ்.சேனாநாயக்கவின் கெபினட் சபையில் தொழிலாளர் மற்றும் சமூக சேவை அமைச்சராகப் பதவி வகித்தார்.


- முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பேண முயற்சிகளை எடுத்த டி.பி. ஜாயா முழுநாட்டினதும் பூரணமான அரசியல் சுதந்திரத்தை வென்றெடுக்கும் போராட்டத்தில் ஏனைய தலைவர்களுடன் அர்ப்பணிப்புடன் பணியாற்றினார்.
- தேசியப் பிரச்சினைகள் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசேட குழுக்கள் பலவற்றில் உறுப்பினராகப் பணியாற்றினார். 1946இல் சிங்கள, தமிழ் மொழிகள் அரச மொழிகளாக பயன்படுத்துதல் பற்றிய முன்மொழிவுகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட உபகுழு, 1943இல் நியமிக்கப்பட்ட கல்விக்கான விசேட குழு 1947இல் தேசியக் கொடியை உருவாக்குதல் தொடர்பான விசேட குழு ஆகியவை டி.பி ஜாயா சேவையாற்றிய தேசிய குழுக்கள் சிலவாகும்.

1915இல் ஏற்பட்ட சிங்கள - முஸ்லிம் இனக் கலவரத்தை தமது நன்மைக்குத் திருப்பிக் கொண்ட பிரித்தானிய அரசு சிங்கள முஸ்லீம் மக்கள் பிரிவுகளைப் பேதப்படுத்த எடுத்த முயற்சிகளைத் தலைகீழாக மாற்றி சிங்களத் தமிழ்த் தலைவர்களுடன் கைகோர்த்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பிட முன்னோடியாகப் பணியாற்றிய மக்கள் தலைவர்களுள் ஒருவராக டி.பி.ஜாயா திகழ்கிறார்.

## தேசபிதா டீ.எஸ்.சேனாநாயக்க (1884 - 1952)

டீ.சி சேனாநாயக்க, எப்.ஆர்.சேனாநாயக்க இருவரும் டீ.எஸ் சேனா நாயக்கவின் மூத்த சகோதரர்களாவர். தமது பெருந்தோட்டங்களை நிர்வாகம் செய்து கொண்டிருந்த அவர் எப்.ஆர் சேனாநாயக்க ஆரம்பித்த மதுஒழிப்பு இயக்கத்தின் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டார்.

- இவர் 1915இல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது சிறைவாசம் சென்றார்.
- 1919இல் உருவான இலங்கைத் தேசிய காங்கிரசின் உறுப்பினராவார்.
- அரசியல் யாப்புச் சீர்திருத்த இயக்கத்தின் செயற்றிறன் மிக்க உறுப்பினரான டீ.எஸ் அவர்கள் 1924இல் யாப்புச் சீர்திருத்தத்தைப் பெற்றுக் கொள்வதில் பங்களிப்புச் செய்தார்.
- 1924இல் சட்டவாக்கக் கழகத்துக்குத் தெரிவான அவர் உத்தியோக பூர்வமற்ற முறையில் அதன் செயலாளர் ஆனார்.



D.S. சேனாநாயக்க

1931இல் டொனமூர் யாப்பு மூலம் கிடைத்த அரசுக் கழகத்தில் மினுவங்கொடத் தொகுதி உறுப்பினராகப் போட்டியின்றித் தெரிவானார்.

- அரசுக் கழகத்தில் விவசாயக் காணி நிர்வாகக் குழுவின் தலைவராகப் பதவி வகித்தார்.

1935இல் ''**விவசாயமும் தேசத்தின் நீர்வளமும்**'' எனும் பெயரில் நூல் ஒன்றை எழுதினார்.

- அந்நூலின் மூலம் விவசாயத்தை மேம்படுத்துவதன் அவசியத்தையும் அதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளையும் விளக்கினார்.

- இராஜரட்டைப் பகுதியில் கள விஜயங்களை மேற்கொண்ட டீ.எஸ் சேனாநாயக்க அவர்கள் அப்பகுதியின் குளங்களையும் கால்வாய்களையும் புனர் நிர்மாணஞ்செய்து, காடுகளை அழித்து, விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கையை மேற்கொண்டமை உன்னத செயற் பாடாகும்.

- 1946இல் ஐக்கிய தேசியக் கட்சியை ஆரம்பித்து 1947 இல் தேர்தலில் அதிகளவிலான ஆசனங்களையும் வென்றார்.

1948இல் சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமராகும் வாய்ப்புப் பெற்றார்.

இலங்கையின் முதலாவது பல்நோக்குத்திட்டமான கல்லோயாத் திட்டம் டீ. எஸ். சேனாநாயக்க அவர்களின் முயற்சியின் வெற்றியாகும். இன்றும் இலங்கையின் நெல்லுற்பத்தியில் கல்லோயாத் திட்டத்தின் பங்கு அளப்பரியதாகும். தேசபிதா என்றழைக்கப்பப்பட்ட இவர், நாடு சுதந்திரம் பெறுவதற்கும் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அரும் பாடுபட்டார்.
டி.எஸ்.சேனாநாயக்க அவர்களின் உருவச்சிலை நாடெங்கிலும் அமைக்கப்பட்டுள்ளதோடு, சுதந்திரச் சதுக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள இவரது உருவச்சிலை அவைகளுள் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

## செயற்பாடு

டி.எஸ்.சேனாநாயக்கவின் நினைவு தினத்தைக் கொண்டாடுங்கள். அவரது படம் பாடசாலையில் இல்லாவிடின் அதனைப் பெற்று, பாடசாலையில் பொருத்தமான இடத்தில் காட்சிப்படுத்துங்கள் 2 அல்லது 3நிமிடங்கள் ஒவ்வொரு மாணவரும் அவரைப் பற்றிப் பேச்சொன்றை நிகழ்த்துங்கள்.

## பயிற்சி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 சு | | | | | | 6 பா |
| | | | | | | |
| | | | 2 நா | | | |
| | | | | | | |
| | 3 ஆ | | | | | 5 ஜா |
| | | | | | | |
| 4 பா | | | | | | |

**இடமிருந்து வலம்**

(1) மாளிகாகந்த வித்யோதய பிரிவெனாவை நிறுவிய தேரர்

(2) இந்து சமய மறுமலர்ச்சிக்குப் பணியாற்றியவர்

(3) மிஷனரிமாரின் ஆங்கிலப் பாடசாலைகளுக்கு இணையாக ஓல்கொட் அவர்களால் உருவாக்கப்பட்ட பௌத்த பாடசாலை

(4) பௌத்தர்களால் நடாத்தப்பட்ட சமய விவாதங்களில் முக்கியமான விவாதம் நடைபெற்ற இடம்

### மேலிருந்து கீழ்

(1) பாணந்துறை விவாதத்தின் விளைவாக வெளியான சிங்களச் சஞ்சிகை

(5) சிங்கள, தமிழ்த் தலைவர்களுடன் இணைந்து செயலாற்றிய முஸ்லிம் தலைவர்

(6) திரு. கன்னங்கரா அவர்கள் ............................ வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியை அறிமுகம் செய்தார்.

## சுருக்கம்

- பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையில் செயற்படுத்திய மிஷனரிக் கல்விக் கொள்கைகள் ஏனைய சமயங்களில் ஒருவிதத் தாக்கத்தை ஏற்படுத்தின.

- இலங்கையின் அரசியல் உரிமைகளைப் பறித்துக் கொண்ட ஆங்கிலேயரின் நடவடிக்கைகளால் இலங்கையர் துன்பத்துக்குள்ளாகினர்.

- பிரித்தானிய மிஷனரிகளை எதிர்த்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்திய தலைவர்கள் மீது எமது கவனத்தைச் செலுத்துவோம்.

- இழந்து போன எமது அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தருவதற்காக தமது உயிரையும் துச்சமாக மதித்துச் செயற்பட்ட தேசிய வீரர்களின் தரவுகளைச் சேகரிப்போம். தாய்நாட்டுக்காகவும், சமாதானத்துக்காகவும் தமது சொத்து, சுகம், உழைப்பு, வாழ்க்கை என எல்லாவற்றையும் அர்ப்பணித்த தேசியத் தலைவர்கள் அனைவருக்கும் இப்பாடம் சமர்ப் பணமாகட்டும்.



**தேசியம் தங்க மாளிகையாகும்**
**சமயம் மாணிக்க விளக்காகும்**
**அவற்றைக் காப்பதற்கு**
**உன்னால் இயலுமானால்**
**நீயே மகனாவாய்**